இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு, "நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள்; அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் கடன் கொடுங்கள். அப்போது உங்கள் கைம்மாறு மிகுதியாய் இருக்கும். நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள். ஏனெனில் அவர் நன்றிகெட்டோருக்கும் பொல்லாதோருக்கும் நன்மை செய்கிறார். உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" என்றார். (லூக்கா 6:35-36)

# தீபகற்ப மலேசிய திருஅவையில் தவக்கால பரப்புரை திட்டங்களும் செயல்பாடுகளும்

## கோலாலம்பூர் உயர் மறைமாவட்டம்

1981-ல் மறைந்த கர்தினால் சோட்டர் பெர்ணான்டஸ் அவர்களால் தொடங்கப்பட்ட தவக்கால பரப்புரை முதலில் மலேசியாவில் உள்ள திருஅவை இறைமக்களை ஏழைகள் மீது அக்கறையும், நீதி மற்றும் அமைதியை ஊக்குவிக்கவும் ஏற்படுத்தப்பட்டது.

இன்று, இந்த பரப்புரையின் நோக்கம் மூன்று வகையில் அர்த்தமுள்ள மற்றும் பலனளிக்கும் வகையில் கிறிஸ்த வர்களை ஊக்குவிப்பதாக உள்ளது. முக்கியமாக, கிறிஸ்தவர்கள், இறைவேண்டல் (மத். 6:6), நோன்பு (மத். 6:17), மற்றும் தர்ம செயல்களில் (மத். 6:2) ஈடுபடவும், இவற்றின் வழி மனந்திரும்புதல், புதுப்பித்தல், மற்றும் தனிநபர்கள், குடும்பங்கள், சமூகங்களின் மனமாற்றத்திற்கு வழி காண அழைக்கப்படுகிறார்கள்.

### எதிர்நோக்கு திருப்பயணிகள்

கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு பாஸ்கா பெருவிழாவுக்கு முன் பரப்புரையின் கருப்பொருளாக 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' எனும் யூபிலி 2025-ன் கருப்பொருளுக்கு ஏற்ப ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்பாகும்.

இந்த பாஸ்கா பெருவிழாவில் ஆழ்ந்த நம்பிக்க, செயல் மற்றும் தர்மம் ஆகியவற்றை கொண்டு நமது ஆன்மீக வளத்தைக் கண்டுணர அழைக்கப்படுகிறோம். கடவுளின் படைப்புகளாக இழ்ந்த ஆன்மீகத்தை மீண்டும் கண்டுபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறோம்.

மேலும், கடவுள் மீதான ஏக்கம், ஒருவருக்கொருவர் பரிமாறும் அன்பு ஆகிய மனிதநேயப் பணிகளில் நம்மை ஊக்குவிக்கவும், தேவையில் இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் இந்த தவக்காலம் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நம்புவோம.

## பினாங்கு மறைமாவட்டம்

இந்த எதிர்நோக்கின் யூபிலி ஆண்டான 2025-ல் எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய நாம், எதிர்நோக்கு அளிக்கும் உத்வேகத்தைத் தழுவி, எப்போதும்



கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ்

எதிர்நோக்கைத் துடிப்புடன் கொண்டிருப்பதோடு, புனிதமிகு தவக்காலத்தில் ஒன்றித்துப் பயணிப்போம். தலைமை வானதூதர் கபிரியேல், தூய ஆவியானவர் மற்றும் விரைவில் புனிதராக இருக்கும் அருளாளர் கார்லோ அகுடிஸ் ஆகியோரால் வழிநடத்தப்பட்ட இந்த எதிர்நோக்கின் தெய்வீக கொடை, ஒருபோதும் நம்மை கைவிடாது, விரக்தியடைச் செய்யாது, எப்போதும் உயிர்த்துடிப்புடன் கொண்டிருக்க உதவும்.

அதே யூபிலி உணர்வில், கரித்தாஸ் / பினாங்கு மறைமாவட்டத்தை 2025 ஆம் ஆண்டின் தவக்காலச் செய்தியில் எதிர்நோக்கு மற்றும் காணாத விடயங்களின் நம்பிக்கை: எதிர்நோக்கை மீண்டும் கண்டுபிடிப்பதற்கும், அதே எதிர்நோக்கை அறிக்கையிடுவதற்கும் எதிர்நோக்கை உருவாக்குவதற்கும் அர்ப்பணிக்கிறோம்.

எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது (உரோ 5:5) எதிர்நோக்கானது, சமூகப்பணி, ஒருங்கிணைந்த மனித மேம்பாடு, தொண்டு, உருவாக்கத்திற்கான கவனிப்பு, நிவாரணம் மற்றும் சமூக சேவைகளைத் தன்னுள் உள்ளடக்கியது. இந்த பணியானது நம்மில் எதிர்நோக்கை உருவாக்குவதற்கும், நம் எதிர்நோக்கை உயிரோடு வைத்திருப்பதும் உதவுவதாகும். இந்த தவக்காலத்தை ஒரு மாற்றத்துடன் தொடங்குங்கள். மனமாற்றம் என்பது வெறுமனே மனந்திரும்பி நற்செய்தியில் நம்பிக்கை வைப்பதாகும். நாம் அதை எப்படி செய்வது? திருமுழுக்கு யோவான் கூறுகிறார், யாரிடம் இரண்டு அங்கி கள் இருக்கிறதோ அவர்கள் இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும், உணவு உள்ளவர்களும் அதையே செய்ய வேண்டும்.

சமூகத்தில் அக்கறை காட்டவும், சமூக நீதியை மேம்படுத்தவும் நமது எதிரநோக்கு நம்மை அழைக்கிறது. சமூகப் பணியானது ஒருங்கிணைந்த மனித மேம்பாடு, தொண்டு, உருவாக்கத்திற்கான கவனிப்பு, நிவாரணம் மற்றும் சமூக சேவைகளை உள்ளடக்கியது. இந்த பணியானது எதிர்நோக்கை உருவாக்குவதும் அதனை உயிரோடு வைத்திருப்பதும் ஆகும்.

இந்த தவக்காலத்தை மனமாற்றத்துடன் தொடங்குங்கள். மனமாற்றம் என்பது வெறுமனே மனந்திரும்பி நற்செய்தியில் நம்பிக்கை வைப்பதாகும். நாம் அதை எப்படி செய்வது? திருமுழுக்கு யோவான் கூறுவதபோல், யாரிடம் இரண்டு அங்கிகள் இருக்கிறதோ அவர்கள் இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும், உணவு உள்ளவர்களும் அப்படியே செய்ய வேண்டும்.

கரித்தாஸ் (Caritas) உறுப்பினர்களான, நீங்கள் மகிழ்ச்சி, இரக்கம் மற்றும் எதிர்நோக்கின் மறைப்பணி சீடர்கள் ஆவர். எப்பொழுதும் இந்த நல்லெண்ணத்தைக் கொண்டிருங்கள். இதற்கு உடல், ஆன்மா மற்றும் ஆவியை உள்ளடக்கிய முழு அர்ப்பணிப்புத் தேவைப்படுகிறது. காதுகள் (செய்திகள்) மற்றும் கண்கள் (காட்சிகள்) மூலம் தலையிலிருந்து (எண்ணங்களிலிருந்து) புனிதப் பயணம் செய்து, மரியாவைப் போல ஆழ்ந்துச் சிந்தித்து செயலாறுங்கள். செயலில் நம்பிக்கை வைத்து உங்கள் கைகள் மற்றும் கால்களுக்கான திருப்பயணத்தைத் தொடருங்கள்.

### அருள்பணி ஜோக்கிம் ரோபர்ட் பினாங்கு மறைமாவட்ட கரித்தாஸ் தலைவர்



கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

நாம் தொடங்கும் இந்த புனிதமான தவக்காலமானது, நம் இதயங்களில் எதிர் நோக்குக்கான ஏக்கத்தோடு, நாம் தொடங்கும் இந்த எதிர்நோக்கின் திருப்பயணத்தைப் பற்றி சிந்திப்போம். தவக்காலம் நம் ஆவியையும், சிந்தனையையும் புதுப்பிக்கவும், திறந்தமனதுடன் இயேசுவின் தொடுதல் வழி, மனமாற்றம் பெறவும் நம்மை அழைக்கிறது. ஆகவே, மனமாறிய மக்களாக இத்திருப்பயணத்தில் ஆண்டவரின் இரக்கத்தையும் அன்பையும் தேவையில் உள்ள ஏழை எளியவர்களோடு பகிர்வோம்.

உங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட தவக்கால வழிகாட்டியில் உள்ள உண்மை கதைகளையும் காணொளிகளையும் கண்டு அதில ஈடுபட உங்களை ஊக்குவிக்கின்றேன். இந்த கதைகள் உங்களுள் எதிர்நோக்கை மீண்டும் தட்டி எழுப்பி, அடுத்திருபவர் மீது அக்கறையும் பரிவிரக்கமும் செலுத்த இந்த தவக்காலப் பயணம் தூண்டுவதாக. இதன்வழி இறைவனின் அன்பின் அடையாளமாகவும் அனைவருக்கும் சிறந்த எதிர்நோக்கின் விளக்காகவும் திகழ இறைவன் அருள் புரிவாராக.

## மலாக்கா ஜொகூர் மறைமாவட்டம் (MJD)

இவ்வாண்டு தவக்காலப் பரப்புரையானது மூன்று வெவ்வேறு கட்டங்களாக கட்டமைக்கப்பட்டுள்ளது, ஒவ்வொன்றும் இயேசுவின் மாதிரியில் பணியாளரை மையமாகக் கொண்டது, கத்தோலிக்க சமூக போதனை மற்றும் கத்தோலிக்க இரக்கப் பணிகளை இது உள்ளடக்கியது.

### கட்டம் 1: தயாரிப்பு

இந்த தவக்காலப் பயணம், 'பணியாளர்' என்ற கருப்பொருளுக்குள் உங்களை அழைக்கிறது. இந்த தவக்காலத்தில் சேவை செய்ய இயேசு எப்படி என்னை அழைக்கிறார்? என்று சிந்திக்கவும் செயல்படவும் அழைக்கிறது.

### கட்டம் 2: செய்வது > இருப்பது

ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியாகவோ தாகமாகவோ கண்டோம்? என்பதற்கு, அரசர், 'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப் பதிலளிப்பார்.' (மத் 25:35-40.) இது இந்த தவக்காலம் நடவடிக்கை/சேவைக்கான அழைப்பாகும். இது பசித்தவர்களுக்கு உணவளிப்பது, தனிமையில் இருப்பவர்களைச் சந்திப்பது, நோயாளிகள் மற்றும் வயதானவர்களைக் கவனிப்பது அல்லது மிக எளிமையான பணியான யாரோ ஒருவரின் அழுகுரலுக்குச் அமைதியாகச் செவிசாய்ப்பதாகும்.

### கட்டம் 3: பிரதிபலிப்பு

புனித வாரத்தில், இயேசு தம்முடைய பாடுகளில், சேவையின் மிக உயர்ந்த பங்காகத் தம்மையே வழங்குவதைக் காண்கிறோம். இதில், என் பணி அனுபவத்திலிருந்து இயேசு என்ன சொல்கிறார்? என் உணர்வுகள், என் சந்திப்புகள், என் போராட்டங்கள் யாவை? என்று சிந்திப்போம்.

### தவங்கால அன்பின் பை திட்டம்

இத்திட்டமானது வாழ்க்கையோடு போராடும் குடும்பங்களுக்கு தேவையான அன்றாட மளிகை பொருட்கள், வீட்டு பொருட்கள், குழந்தைகள் மற்றும் அவர்களுக்கான பள்ளி பொருட்கள் போன்றவற்றுடன் உதவ முன்மொழியப்பட்ட திட்டமாகும். நோன்பு காலத்தில் ஒவ்வொரு பங்கிலும், குடும்பங்களுக்கு ஒரு துணி பை வழங்கப்படும். அதில் அவர்கள் கொடுத்து உதவிட விரும்பும் பொருட்களை நிரப்பலாம். நிரப்பப்பட்ட பைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மீண்டும் சேகரிக்கப்பட்டு, பொருட்கள் வகைப் பிரிக்கப்பட்டு, தவக்காலத்தின் போது அல்லது அதற்குப் பிறகு தேவையில் இருப்போருக்கு விநியோகிக்கப்படும்.

இத்திட்டம், பங்கு மக்கள் தங்கள் எதிர்நோக்கை செயல்பாட்டில் வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது,

## கூலாய், கிறிஸ்து அரசர் பங்கில் 'புதிய உறவுகள்' இளையோர் ஒன்றுகூடல் நடைபெற்றது

கூலாய்: கடந்த 8 பிப்ரவரி 2025, இங்குள்ள கிறிஸ்து அரசர் பங்கில் தமிழ் மேய்ப்புபணிக்குழு இளைஞர்களின் முயற்சியுடனும், பொறுப்பாளர்கள் மற்றும் பெற்றோர்களின் ஆதரவுடனும், "புதிய உறவுகள்" நிகழ்ச்சி ஹூட்டான் பண்டார் புத்தரா, கூலாய் பகுதியில் காலை 8.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 23 இளைஞர்கள், பெற்றோர்கள் மற்றும் பொறுப்பாளர்கள்




இணைந்து உற்சாகமாக கலந்து கொண்டனர். குழு விளையாட்டுகள், நடவடிக்கைகள் மற்றும் போட்டிகள் மூலம், அனைவரும் ஒன்றிணைந்து உறவுகளை வளர்த்தனர். இளைஞர்கள் ஒற்றுமை, குழு செயல்பாடுகள் மற்றும் நட்பின் முக்கியத்துவத்தை அனுபவத்தின் மூலம் கற்றுக் கொண்டனர்.



இந்த நிகழ்ச்சி 13 வயது நிரம்பிய புதிய இளைஞர்களை வரவேற்க சிறப்பாக அமைந்தது. அவர்களுக்கு இளைஞர் குழுவில் ஒரு உற்சாகமான தொடக்கத்தை வழங்கியது. இந்த நாள் அனைவருக்கும் மறக்க முடியாத, மகிழ்ச்



சியூட்டும் அனுபவமாக அமைந்தது. அனைவரும் புத்துணர்ச்சியுடன் திரும்பினர்.

*கி. கிறிஸ் ஐரின், இளைஞர் அணி*

## செயற்கை நுண்ணறிவு (AI) மாநாட்டிற்கு திருத்தந்தையின் செய்தி

செயற்கை நுண்ணறிவு குறித்து பிரான்ஸ் நாட்டின் பாரிசில் இடம்பெற்ற இரண்டு நாள் உச்சி மாநாட்டிற்கென, பிரான்ஸ் அதிபர் எம்மானுவேல் மக்ரோன் அவர்களுக்குச் செய்தி ஒன்றை அனுப்பினார். திருத்தந்தை பிரான்சிஸ்.

'செயற்கை நுண்ணறிவு நடவடிக்கை உச்சி மாநாடு' என்ற தலைப்பில் இம்மாதம் 10 மற்றும் 11 தேதிகளில் இடம்ற்ற கூட்டத்திற்கு திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில், ஏற்கனவே இத்தாலியின் பூலியாவில் இடம்பெற்ற ஜி7 கூட்டத்தின்போது, தான் செயற்கை நுண்ணறிவுத் திட்டங்கள் எடுக்கும் தேர்வுகள் மனிதக் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியதை இங்கு மீண்டும் நினைவூட்டியுள்ளார்.

இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லையெனில், ஆச்சரியம் நிறைந்த இந்த செயற்கை நுண்ணறிவு மனித மாண்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஆபத்து உள்ளது எனவும் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

மனித குலத்தை செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டின் பாதிப்புகளில் இருந்து காப்பதற்கு அரசியல் மட்டத்தில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை தான் பாராட்டுவதாகத் தெரிவிக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தற்போதைய




பிரான்ஸ் தலைநகரில் செயற்கை நுண்ணறிவு குறித்த மாநாடு

பாரிஸ் மாநாடும் பயன் தரும் தீர்மானங்களை எடுக்க உதவும் வகையில் பல்வேறு வல்லுனர்களுடன் இடம்பெறுவது குறித்து தன் மகிழ்ச் சியையும் வெளிப் படுத்தி உள்ளார்.

நம்முடைய இருப்பின் அர்த்தத்தை வெளிப்படுத்துவது நம் இதயம் மட்டுமே என்பதை இம்மாநாட்டில் பங்குபெறுவோர் அனைவரும் உணர்ந்து செயல்படவேண்டும் என்ற அழைப்பை விடுக்கும் திருத்தந்தையின் செய்தி, எந்த ஒரு புதிய தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளும் பொது நலனுக்கு பலன் தருவதாக இருப்பதோடு, மனித படைப் பாற்றலை கட்டுப்படுத்துவதாக இருக்கக் கூடாது என்றவகையில் அரசியல் அளவில் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் பாராட் டப்பட வேண்டியவை என மேலும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

_கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்

## 1.3 மில்லியன் திருப்பயணிகள் யூபிலியின் முதல் மாதத்தில் புனித பேதுரு மண்டப கதவைக் கடந்தனர்.

வத்திக்கான்: திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2025 யூபிலி ஆண்டின் தொடக்கத்தைக் குறித்ததிலிருந்து, 1.3 மில்லியன் மக்கள் வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பசிலிக்காவின் புனித வாசலைக் கடந்து சென்றுள்ளனர் என்று நற்செய்தி அறிவிப்பிற்கான புதிய அலுவலகச் சார்பு பேராயர் ரினோ பிசிசெல்லா தெரிவித் துள்ளார்.

ஆயுதப்படைகளின் யூபிலிக்கான பிப்ரவரி 7 செய்தியாளர் சந்திப்பில் பிசிசெல்லா இந்த அறிவிப்பை வெளியிட்டார். எவ்வாறாயினும், திருப்பயணிகளின் எண்ணிக்கை "யூபிலியின் வெற்றிக்கான அளவுகோல் அல்ல" என்று பேராயர் சுட்டிக்காட்டினார். மக்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதுதான் முக்கியம். புனித கதவுகள் பொதுவாக ரோமில் உள்ள நான்கு திருத்தந்தையர் பசிலிக்காக்களில் மட்டுமே ஏற்படுத்தப்பட்டுள்ளன. வத்திக்கானில் உள்ள புனித பேதுரு, புனித 'யோவான் இலாத்தரன், புனித மேரி மேஜர் மற்றும் புனித பவுல் சுவர்களுக்கு வெளியே ஆகும். ஆனால் இந்த ஆண்டு, திருத்தந்தை பிரானிக்ஸ் ரோமில் உள்ள ரெபிபியா சிறையில் மற்றொரு இடத்தையும் திறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## நாம் அன்பினில் பிறந்த இறைக்குலம் !

திருஅவை இன்று பொதுக்காலத்தின் 7ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறது. இன்றைய முதல் வாசகத்தில் சவுல் தன்னைக் கொல்லத் தேடியும், ஆண்டவரால் அருள்பொழிவு செய்யப்பட்டவர் மீது கை வைக்கமாட்டேன் என்று சவுலை விட்டு சென்ற தாவீதின் மன்னிக்கும் இயல்பை இன்றைய முதல் வாசகத்தில் அறிகிறோம்.

இரண்டாம் வாசகத்தில் முதல் ஆதாம் மண்ணில் வந்தவர் என்றும் இரண்டாம் ஆதாமாகிய இயேசு விண்ணில் இருந்து வந்தவர் என்றும், இயேசுவோ தன்னைப் பலியாக்கி நம்மை அனைத்துப் பாவங்களில் இருந்து மீட்டவர் என்று பவுல் அடிகள் விவரிக்கிறார். மனித குலம் ஒன்றுதான், பல்வேறு இனத்தவராயினும், பல்வேறு நிறத்தவராயினும், பல மொழி கொண்டவராயினும் உலக மக்கள் அனைவரும் ஒரு ஊற்றில் உதித்தவர்கள் என்பது இறைநம்பிக்கை. மண்ணகத்தைச் சார்ந்த நாம் விண்ணகத்திலிருந்து வந்த இயேசுவின் சாயலை அணிந்து கொள்வோம். அவரைப் போலவே மன்னித்து வாழும் நல்மனம் கொள்ள வேண்டும் என்று பவுல் அடிகள் வலியுறுத்துகிறார்.

நற்செய்தியிலோ, பலவிதமான குணாதிசயங்களைக் கொண்ட மனிதனை கட்டளையின் முதன்மையானதான' பகைவனுக்கு அன்பு செய்தல்' எனும் கட்டளையை செயல்படுத்தச் சொல்கிறார் அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கிறார் என பாடுகிறோம். நம்மீது அன்பு செலுத்துபவர்கள் மீதுதான் பதிலுக்கு அன்பு செலுத்துகிறோம். இவ்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் மன்றாடுங்கள் என்ற இயேசுவின் வார்த்தைதை வாழ்வாக்கிய புனித இரண்டாம் ஜோன் போல் , புனித அன்னை திரேசா மற்றும் அருள்சகோதரி ராணி மரியா போன்றோர் நாம் வாழும் காலத்திலேயே நமக்கு இறை சாட்சிகளாக வாழ்ந்து காட்டினார்கள்.

ஆண்டவரின் வார்த்தையும், "பகைவனுக்கு அன்பு செய்", "ஒரு கன்னத்தை அறைந்தால் இன்னொரு கன்னத்தையும் காண்பியும்" என்பதில் நமது பதில்தான் என்ன? அடுத்து ஆங்கிலேயர் ஆட்சியில் வன்முறையை எதிர்த்து அகிம்சை வழியில் மக்களுக்கு விடுதலைக்கு போராடிய காந்தி பெருமகனார் உலக அமைதிக்கு வழிகோறி வெற்றியும் கண்டார் என்பது வரலாறு. கிறிஸ்துவை ஏற்கத் தயங்கிய பலரும் அன்னை திரேசவின் அன்பு பணியில் தங்களை ஈடுபடுத்தி பகைவரை மன்னித்தனர். இறைவன் இரக்கமும் அன்பும் நிறைந்தவராய் இருப்பது போல தங்களையும் பக்குவப்படுத்திக் கொண்டனர்.

இரக்கம் என்பது இறையன்பின் வெளிப்பாடு. நம் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல நாமு இரக்கமுடையவராய் இருக்க அழைக்கப்படுகிறோம். நாம் பிறரை நிபந்தனையின்றி அன்பு செய்யும்போது, சிறு சிறு குறைகள் பெரிதாகக் கருதப்படுவதில்லை. அன்பைப் பெற்றுக்கொள்ளும போதும், நிறைவான மனதுடன் அன்பை பிறருடன் பகிரும் போதும், தூயவரான நம் இறைவனுக்கு நகருக்கமானவர்களாக நம்மால் ஒளிர முடியும்.

தீர்ப்பு வழங்குவது நமது வேலையல்ல. மண்ணக மக்களுக்கு குற்றத் தீர்ப்பு வழங்க விண்ணவருக்கு ஒருகாலம் வரும். நாமும் அதற்கு ஆளாவோம். சகோதர மனப்பான்மையோடு ஒரே ஆவியில் வாழ அழைக்கப்பட்ட நாம் அவ்வாறான வாழ்வில் சீடத்துவத்தை ஆழப்படுத்துவோம்

ஆ.வி.டேவிட், குளுவாங்

### பொதுக்காலம் 7ஆம் வாரம் - ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம் | 1 சாமு 26:2,7-9,12-13,22-23 |
| திரு.பாடல் | 103:1-2.3-4.8,10.12-13 |
| வாசகம் | 1கொரி 15: 45-49 |
| லூக்கா | 6: 6: 27-38. |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 3**